இலங்கை வங்கியினால் முழுமையாக உரிமம் கொள்ளப்பட்ட துணை நிறுவனமான BOC IT சொலூஷன்ஸ் (வரையறுக்கப்பட்ட) நிறுவனம் கீழே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு தகுதிவாய்ந்த, அனுபவமிக்க, துடிப்பான மற்றும் விளைவுகள் சார்ந்த மனப்பான்மையுடைய இளம் நபர்களை எதிர்பார்க்கின்றது.

## மைய வங்கி முறைமை உதவிப் பகுப்பாய்வாளர் (ஒப்பந்த அடிப்படை - 3 வருடங்கள்)

**1. கல்வித் தகைமைகள்**

- தகவல் தொழில்நுட்பம் அல்லது தொடர்புடைய துறையில் இளங்கலைமாணி பட்டம் (தயவு செய்து உங்கள் விண்ணப்பத்துடன் பிரதிகளை இணைக்கவும்).

**2. தொழில்முறைத் தகுதி**

- பின்வரும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் ஏதேனும் ஒன்றில் தொழில்முறைச் சான்றிதழ்கள் (தயவு செய்து உங்கள் விண்ணப்பத்துடன் பிரதிகளை இணைக்கவும்).

  RPG (II, III, 400, ILE) நிரல்படுத்துகை

  வேறு எந்தவொரு நிரலாக்க மொழியும்
- ITIL அடிப்படைத் தகைமைகள் மேலதிகத் தகுதிகளாகக் கருதப்படும்.

**3. கடந்த கால பணி அனுபவம்**

- RPG (II, III, 400, ILE) நிரலாக்கத்தில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருட அனுபவம்

  அல்லது
- மென்பொருள் மேம்பாடு தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம்
- மைய வங்கிப் பயன்பாடு மேம்பாட்டுக் குழுவுடன் இணைந்து பணியாற்றுவதுடன் End-to-end systems development life cycles, waterfall, Agile, DevOps மற்றும் மென்பொருள் மேம்பாட்டிற்கான ஏனைய நவீன அணுகுமுறைகள் பற்றிய அறிவு மேலதிகத் தகைமையாக் கருதப்படும்.

**4. வயது எல்லை**

- இறுதி திகதியின்படி 35 வருடங்கள் அல்லது அதற்குக் குறைந்த தாக இருக்க வேண்டுப்.

**முக்கியப் பொறுப்புகள்**

a. பயன்பாட்டிற்காக நிறுவப்பட்டுள்ள செயலி அமைப்பு (deploy application system) தொடர்பாக பயனாளர்களால் எழுப்பப்படும் சிக்கல்கள் மற்றும் வணிகப் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

b. அனைத்து வரையறுக்கப்பட்ட வங்கி செயலி அமைப்புகளுக்கான ஒத்துழைப்பினை வழங்குதல்.

c. பயனர்களுடன் தொடர்பு கொண்டு, தற்போது பயன்பாட்டிற்காக நிறுவப்பட்டுள்ள செயலி அமைப்புகளில் உள்ள தவறுகளை சேகரித்து ஒருங்கிணைத்தல்

d. தரவுத்தள நிர்வாகி / சர்வர் ஒங்கிணைப்பு குழ மற்றும் தரவு மையக் கட்டமைப்பாளர்களுடன் தேவைப்பட்ட மற்றும் தேவைப்படும் வகையில் ஒருங்கிணைந்து, தரவு மேம்பாடு, தரவு மாதிரி மற்றும் தொடர்புடைய பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளுதல்.

e. பயனர் ஏற்புத் தேர்வுகளுக்கு தொழில்நுட்ப ஆதரவு, உள்நிறுவன பயிற்சி நிரல்கள் ஈடுபடுதல், அதன்மூலம் வணிக பயனர்களுக்கு செயலி அமைப்புகள் தொடர்பான மேலோட்டம் மற்றும் பயனர் பயிற்சி வழங்குதல்.

f. வங்கியானது தனது நோக்கங்களை அடைவதற்கு அதன் பிரிவு முகாமையாளரின் அறிவுறுத்தப்படும் பிற பணிகளை மேற்கொள்ளுதல்.

g. 24 மணி நேரமும் பயனரின் அழைப்பின் மூலம் ஏற்படுத்தப்படும் கோரிக்கைகளை கையாளுதல்

---

- **வேலைவாய்ப்பு வகை**
  - உங்கள் விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
- **ஒப்பந்தக் காலப்பகுதி**
  - மொத்த ஒப்பந்தக் காலம் 03 வருடங்கள் (ஆண்டுதோறும் செயற்திறன் மதிப்பாய்வுக்கு உட்பட்டது)
- **சம்பள அளவு**
  - பேசித் தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரியின் சுய விருப்பத்தின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளப் பொதி வழங்கப்படும்.
- **ஏனைய பண்புகள்**
  - சுயமாக உந்தப்பட்ட மற்றும் விளைவுகளை நோக்கிய பண்பு
  - சிறப்பான, பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திறன்களுடன் கூடிய உயர்ந்த புத்தாக்கம்
  - சாதாரண பணி நேரங்கள் மற்றும் வார இறுதி நாட்கள் / விடுமுறை நாட்களில் பணியாற்றக்கூடிய ஆற்றல்

---

**விண்ணப்ப நடைமுறை**

- விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை, பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, அனைத்துக் கல்விசார் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளை இணைத்து, காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்பட்ட பதவியைக் குறிப்பிட்டு, கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு **2025/12/16** ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளை விண்ணப்பிக்கும் இறுதித் திகதியன்று பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பங்கள் அல்லது பொருத்தமான துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பங்கள் அல்லது பிழையான தகவல்களைக் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்ப இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் என்பன எந்தவித மேலதிக அறிவித்தலும் இன்றி ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

**பிரதம நிறைவேற்று அதிகாரி**
**பி ஓ சி மனேஜ்மன்ட் அன்ட் சப்போட் சேர்விசஸ் பிறைவேற் லிமிடெட்**
**(வரையறுக்கப்பட்ட நிறுவனம்)**
18வது மாடி இலங்கை வங்கி - தலைமை அலுவலகம்,
'BOC சதுக்கம்', இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 220 3816, 076 542 5116
மின்னஞ்சல்: **bocmss@sltnet.lk**

BOC IT Solutions (Pvt) Ltd
(A fully owned subsidiary of the Bank of Ceylon)

• எந்த வகையிலான விளம்பரம் செய்து ஆதரவு கோருதலும் உடனடி தகுதியின்மையாகக் கருதப்படும். • தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. • தேவைப்படும் ஆளணியின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான உரிமைகளையோ அல்லது ஆட்சேர்ப்பை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்யவோ உரிமை உள்ளது.